## கன்மலையின் தேனினால் உன்னை திருப்தியாக்குவேன். சங்கீதம் 81 : 16

திருப்தியடைய முடியாத நிலையில் தவித்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதரயே, சகோதரனே
''**உன்னை திருப்தியாக்குவேன்**''–என்று கர்த்தர் சொல்லுகிறார்.

**எதினால் திருப்தியாக்குவார் ? – தேன்**

**எங்கேயிருந்து தேன் வரும் ? –கன்மலை**

**சங்கீதக்காரர் சொல்லுகிறான்**

எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்குக ஒத்தாசை வரும் – என்பதாக, ஆமென்.

ஆம், உன் வாழ்க்கையில் என்னென்ன பிரச்சனைகளினால் திருப்தியடைய முடியாத நிலையில் சோர்ந்து போய் இருக்கிறீர்களோ அவைகளை ஒரு முறை சிந்தித்து பாருங்கள். மனக்கண் முன் ஒவ்வொன்றாய் கொண்டு வாருங்கள்.

1. உங்கள் குடும்ப வாழ்க்கையில் திருப்தியில்லாமல் இருக்கிறீர்களா ?
2. அல்லது வேலை ஸ்தலத்தில் திருப்தியில்லாமல் இருக்கிறீர்களா ?
3. அல்லது ஊழிய ஸ்தலத்தில் திருப்தியில்லாமல் இருக்கிறீர்களா ?
4. அல்லது வெளிநாட்டில் திருப்தியில்லாமல் இருக்கிறீர்களா ?
5. அல்லது வீட்டில் திருப்தியில்லாமல் இருக்கிறீர்களா ?
6. அல்லது வேலைக்கு போக திருப்தியில்லாமல் இருக்கிறீர்களா ?

எதுவாக இருக்கட்டுமே ? சோர்ந்து போக வேண்டாம். தேவனுடைய வசனத்தை விசுவாசிப்போம்.

**சங்கீதம் 81:16 கூறுகிறது :** ''உன்னை திருப்தியாக்குவேன்'' – என்பதாக.

**உங்கள் விசுவாசத்தை கீழ்கண்டவாறு அறிக்கையிடுங்கள்.**

கன்மலையின் தேனினால் என்னை திருப்தியாக்குவார்

மீண்டும், மீண்டும் , மீண்டும் சொல்லிப் பாருங்கள்.

**கன்மலையின் தேனினால் உன்னை திருப்தியாக்குவார்**

ஆம், உங்கள் விசுவாச அறிக்கையின்படியே கர்த்தர் **கன்மலையின் தேனினால் உங்களை திருப்தியாக்குவார்**

**முதலாவதாக 1 கொரிந்தியர் 10 : 4 கூறுகிறது.**

ஞானக் கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள். அந்தக் கன்மலை ''**கிறிஸ்துவே**''–அல்லேலுயா

ஆம், பிரியமானவர்களே, **கன்மலை**– என்பது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை குறிக்கிறது.

**நீதிமொழிகள் 10:22 கூறுகிறது** : கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும். அதனோடே வேதனையைக் கூட்டார்

ஆதலால் நம்முடைய கன்மலையாகிய கிறிஸ்துவை நோக்கிப் பார்ப்போம். அப்பொழுது கன்மலையிலிருந்து நமக்கு ஆசீர்வாதம் வரும்.

**இரண்டாவதாக உபாகமம் 31 : 13 கூறுகிறது.** கன்மலையிலுள்ள தேனையும் கற்பாறையிலிருந்து வடியும் தேனையும் அவன் உண்ணும்படி செய்தார் – என்பதாக.

ஆம், பிரியமானவர்களே, கன்மலையிலுள்ள தேனை உண்ணும்படி செய்தார். கிறிஸ்துவாகிய கன்மலையிடம் உண்ணத்தக்க, தேன் உண்டு –என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொண்வோம்.

**மத்தேயு 4:4 கூறுகிறது** : மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்–என்பதாக.

**சங்கீதம் 119:103 கூறுகிறது :** உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமையானவைகள். என் வாய்க்கு அவைகள் தேனிலும் மதுரமாயிருக்கும் – என்பதாக.

ஆம் பிரியமானவர்களே,

தேவனுடைய வார்த்தை தேனிலும் மதுரமாயிருக்கும். கிறிஸ்துவாகிய கன்மலையிலிருந்து, வார்த்தையாகிய தேன் உங்களிடம் வரும்போது உங்கள் உள்ளத்தில் திருப்தி ஏற்படும். அல்லேலுயா.

**பக்தன் பாடுகிறான்.**

கசந்த மாரா மதுரமாகும் வசந்தமாய் உன் வாழ்க்கை மாறும்
கண்ணீரோடே நீ விதைத்தால் கெம்பீரமாய் அறுத்திடுவாய்

**நிச்சயமாகவே, கர்த்தர் கன்மலையின் தேனினால் உன்னை திருப்தியாக்குவார்.** ஆமென் !